PERMANENT REFERENCE

# PARTICIPATION OF THE GOVERNMENT AND NON-GOVERNMENTAL ORGANIZATIONS ON REHABILITATION AND RECONSTRUCTION PROGRAMMERS OF THE KARAITIVU DIVISIONAL SECRETARIAT DIVISION

001.40361805493
RAV

MR. THADSANAMOORTHY - RAVICHANDRAN

282
Library - EUSL

35462

DEPARTMENT OF COMMERCE
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY
SRI LANKA

1999

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **நன்றியுரை** | I |
| ஆய்வின் சுருக்கம் | I-III |
| **அத்தியாயம்-1** | |
| ஆய்வின் அறிமுகம் | 1-6 |
| **அத்தியாயம்-2** | |
| நூலாய்வு | 7-19 |
| **அத்தியாயம்-3** | |
| பிரதேச செயலக ஆய்வு | 20-46 |
| **அத்தியாயம்-4** | |
| காரைதீவு பிரதேச செயலகப்பிரிவில் ஏற்பட்ட வன்செயல்களும் பாதிப்புக்களும் | 47-57 |
| **அத்தியாயம்-5** | |
| காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் அரச நிறுவனங்களினாலும் அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் மேற்க் கொள்ளப்பட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள். | 58-90 |
| **அத்தியாயம்-6** | |
| புனர்வாழ்வு, புனரமைப்பு செயற்திட்டங்களை நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துகின்ற போது எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் | 91-102 |
| **அத்தியாயம்-7** | |
| அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் புனர்வாழ்வு,புனரமைப்பு நடவடிக்கைகளின் வெற்றிக்கு பங்களிப்பு செய்யக்கூடிய செயற்திட்ட வடிவமைப்புக்கள். | 103-113 |
| **உசாத்துணை நூல்கள்** | |

# ஆய்வின் சுருக்கம்.

காரைதீவு பிரதேச செயலகப்பிரிவில் காலத்திற்குக்காலம் ஏற்பட்டுவந்துள்ள வன்செயல்கள் கலவரங்கள் காரனமாக பல்வேறு வகையான பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அதாவது உயிரிழப்புக்கள், ஊனமுற்றவர்கள், காணாமல் போனவர்கள், கடத்தப்பட்டவர்கள், தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்தோர்கள், இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளவர்கள் போன்ற உயிர்ப்பாதிப்புக்களும், தனியார் வதிவிடங்கள், அரச தனியாார் தொழில் நிலயங்கள், பொதுக்கட்டிடங்கள் போன்ற சொத்துப்பாதிப்புக்களும் விவசாயம், கைத்தொழில், வியாபாரம், சயதொழில்கள், கல்வி, சுகாதாரம், கலாச்ாரம், பொக்குவரத்து போன்ற துறைரீதியான பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை ஈடு செய்வதற்கும் அழிக்கப்பட்ட மக்களின் உடமைகளையும், அரச உடமைகளையும், மீண்டும் கட்டிஎழுப்பவும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்கைத்தரங்களை மேம்படுத்தவும், தேவையான உதவிகளை புனர்வாழ்வு, புனரமைப்பு சமுகநலத்துறை அமைச்சும் பல்வேறு வகையான அரசசார்பற் நிறுவனங்களும் வழங்கிவருகின்றன. அவ்வாறு நடைமுறைப்படுத்தப்டு வந்துள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளாக பாதிப்புற்ற இடம் பெயர்ந்த மக்களுக்கான உடனடி நிவாரணம் வழங்கல், வீட்டுத்திட்டங்களை ஏற்படுத்தி மிளக்குடியமர்த்தல். தொழில் பாதிப்புகளுக்கு உற்பத்தித்திறன் கொண்ட தொழில் முயற்சிகளை ஏற்படுத்தல்,ஊனமுற்றவர்கள், உயிரிழப்புக்கள் என்பவற்றுக்கான நட்டாட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல், புனர்வாழவு, புனரமைப்பு நடடிக்கைகளை துரிதப்படுத்தல், துரிதஅபிவிருத்தித்திட்டம் போன்ற நடவடிக்கைகள் நடைமுறைப்டுத்தப்பட்டு வந்துள்ளன.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ள புனர்வாழ்வு, புனரமைப்பு நடடிக்கைகளின் போது பல்வேறு வகையான பிரச்சனைகளையும் தடைகளையும், பொதுமக்களும் எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டது. இடம் பெயர்ந்தோருக்கு அகதிமுகாம்களில் குடிநீர்வசதி, உணவுவசதி சுகாதாரவசதி என்பன போதியளவு வழங்கப்படாமை, மற்றும் கழிவகற்றும் இடங்கள், மலசல கூடவசதிகள் காணப்படாமை இதன் மூலம் சூழல் மாசடைதலை எதிர்நோக்கவேண்டியிருந்தமை போன்ற பிரச்சனைகள் காணப்பட்டன. அத்தோடு இடம்பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்துவதற்கான அரசகாணிகள் காணப்படாமையும் சொந்த இடங்களுக்கு திருப்பிச்செல்வதற்கு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமையும், மீளக்குடியமர்வுக்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டதோடு கொடுப்பனவுத்தொகை தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதாமலும் இருந்தது.

ஊனமுற்றோர், உயிரிழப்பு போன்றவற்றுக்கான நட்டஈட்டுக்கொடுப்பனவைப் பெறுவதில் பல்வேறு வகையான சிரமங்களைப் பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்நோக்கவேண்டியிருந்தது.

பாதிப்பினை உறுதிப்படுத்துவதற்கான அத்தாட்சிப்பத்திரத்திரங்கள், வைத்தியசான்றிதழ்கள் போன்றவற்றினை பெற்றுக்கொள்வதில் கால தாமதம் ஏற்பட்டதோடு பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கானபதிலும் பிரச்சனைகள் எதிர்நோக்கப்பட்டன. அத்தோடு உளரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள், வயோதிபர்கள், கற்பிணித்தாய்மார்கள் போன்றோருக்கு நிவாரனம் வழங்குவதற்கு நிதிப்பற்றாக்குறையை நிறுவன அமைப்புக்கள் எதிர்நோக்கியதோடு சரியான புனர்வழ்வுத்திட்டங்களை இனம்கண்டு நடைமுறைப்படுத்துவதிலும் பல்வேறுபட்ட நடைமுறைச்சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டன. அத்துடன் அரசநிறுவனங்களினாலும், அரசசார்பற்ற நிறுவனங்களினாலும் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் எதிர்பார்த்த அளவு வெற்றியளிக்கவில்லை. இதற்கு பல காரணங்கள் காணப்பட்டன.

சொத்துக்கள் தொடர்பாக ஏற்பட்ட பாதிப்புக்களை சரியாக மதிப்பீடு செய்வதற்கு கால தாமதம் ஏற்பட்டதோடு பாதிப்புத் தொடர்பான அத்தாட்சிப் பத்திரங்கள், ஆவணங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதில் தடைகள் கானப்பட்டதோடு இவற்றிற்கான இழப்பிட்டுத் தொகையும் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைவாக காணப்பட்டது.

தொழில் முயற்சிக்கான கடன்கள், நன்கொடைகளைப் பெற்றுக் கொள்வதில் காலதாமதமும், வழங்கப்படும். கொடுப்பனவுத் தொகைகள் மிகவும் குறைவாகவும் காணப்பட்டது. அரசசார்பற்ற அமைப்புக்கள் மூலம் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் இறுக்கத்தன்மை கொண்டதாக காணப்பட்டது. அத்தோடு இவ்வமைப்புக்கள் மக்களைப் பலவந்தப்படுத்தி தங்கள் அதிகாரங்களைக்காட்டுவதாகவும், காணப்படுகின்றது. இவைமட்டுமன்றி புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு நிதிப்பற்றாக்குறையும், திறமைமிக்க ஊழியப்பற்றாக்குறையும், நிர்வாகச் சீர்கேடுகளையும் இப்பிரதேச செயலகம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனவே இவ்வாறான பிரச்சனைகளை எதிர்காலத்தில் எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம் என்பது பற்றியும், எதிர்காலத்தில் நடைமறைப்படுத்தவதற்கு பொருத்தமான புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகள் பற்றிய திட்டமாகவும் இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வின் இறுதி அத்தியாயமாக அமைந்துள்ள செயற்திட்ட வடிவமைப்பினைப் பற்றி தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இந்நடவடிக்கைகளின் மூலம் மக்கள் சொந்த வதிவிடங்களில் வசித்தல், சுய தொழில் முயற்சிகள் மூலம் உற்பத்தி அதிகரிப்பு, வேலைவாய்ப்பு அதிகரிப்பு, வருமான அதிகரிப்பு போன்றன ஏற்படுதல் பொதுச்சேவை நிலையங்களின் மூலம் மக்கள் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல். மற்றும் விவசாயம், கைத்தொழில், வியாபாரம், கல்வி, சுகாதாரம், கலாச்சாரம், போக்குவரத்து, தபால்சேவை, தொலைத்தொடர்பு போன்றன முன்னேற்றமடைந்து கானப்படும். அத்துடன் இவ்வாய்ப்பானது எதிர்காவத்தில் இப்பிரதேச செயலகப்பிரிவில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவிருக்கும் அரச, அரசசார்பற்ற அமைப்புக்களுக்கும் உதவுவதுடன் ஏனைய பிரதேசங்களுக்கும் இச்செயற்திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தவும் உதவியாக அமையும்.